Before the Court of Hon'ble Principal District and Sessions Judge, Kanyakumari District @ Nagercoil

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348008

1. District : Kanyakumari PS: VGAC Year: 2025 FIR No.: 08/2025 Date: 12.09.202
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 11.09.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 02.40 PM Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.09.2025 Time : 09.00 AM
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 12.09.2025 Time : 09.00 AM
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 4 KM North
Beat Number : (b) Address : Opposite to P.R Medicals @ Whole Sale agency near SP office, Nagercoil
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. Hari Sudhan (b) Father's/ Husband's Name : Nagarajan
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : D.No. 26-30D, Sivapuram, Boothapandi (P.O), Thovalai Taluk, Kanyakumari District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Kathiravan, Drugs Inspector, Kanyakumari District.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்


No

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any.
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் T.T.Rema..... பதவி Inspector of Police பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி தகவல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/9/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/9/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 12.09.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.45 am

Name: பெயர் C. Sivasankari
Rank: நிலை Inspector of Police
VCAC, Kanyakumari
Detachment @ Nagercoil

Attachment to column No-12 of FIR in Kanyakumari Detachment of the Vigilance and Anti-Corruption Cr.No.08/2025

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:-

இன்று 12.09.2025 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு காவல் ஆய்வாளர் C.சிவசங்கரி ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுகா, பூதப்பாண்டி அஞ்சல், சிவபுரம், கதவு எண் 26-30D என்ற முகவரியில் வசித்து வரும் நாகராஜன் மகன் திரு.N.ஹரிசுதன் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த எழுத்து மூல புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய் தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு குற்ற எண். 08/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 12.09.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் N.ஹரிசுதன், வயது-40, த.பெ நாகராஜன், க.எண்-26-30D சிவபுரம், பூதப்பாண்டி அஞ்சல், தோவாளை தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம். Cell 8754778899 பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, கன்னியாகுமரி மாவட்டம். ஐயா, நான் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, பூதப்பாண்டி அஞ்சல், சிவபுரம் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் D. Pharm படித்து விட்டு கடந்த ஐந்து வருடங்களாக எனது அப்பா பெயரில் உரிமம் உள்ள திட்டுவிளை பேபி மெடிக்கல்ஸில் அப்பாவுடன் சேர்ந்து கடை நடத்தி வருகிறேன். தற்போது நான் சொந்தமாக நியூ பேபி மெடிக்கல்ஸ் என்ற பெயரில் அலோபதி மருந்து மாத்திரை கடை நடத்துவதற்காக மெர்வின்சன், த/பெ தேவநேசன் என்பவருக்கு சொந்தமான தழகியபாண்டியபுரம் பாலமோர் ரோட்டில் கதவு எண்-17/47/2-ல் அமைந்துள்ள கட்டிடத்தை அவருடன் வாடகைக்கு ஒப்பந்தம் செய்து, அதன் அடிப்படையில் Allopathic Drug Sale License பெறுவதற்காக SWP Application No.320409-ன்படி ரூ.3,000/- செலுத்தி 19.08.2025-ம் தேதியன்று இணையவழி விண்ணப்பித்திருந்தேன். எனது மனு சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் இல்லாததால் நான் நேற்று 11.09.2025-ம் தேதி மதியம் DRUGS Inspector திரு.கதிரவன் அவர்களை எனது Drug Sale License பற்றி கேட்பதற்காக அவரது அலைபேசி எண்.8838426936-ல் தொடர்பு கொண்டபோது அவர் வேறொரு வேலையாக இருப்பதாகவும், பிறகு பேசுகிறேன் என்று கூறினார். அதன் பின்னர் எங்களது பேபி மெடிக்கல்சுக்கு தேவையான மருந்து எடுப்பதற்காக நான் வழக்கமாக ஆர்டர் கொடுக்கும் நாகர்கோவிலில் உள்ள கடையில் நின்று கொண்டிருந்த போது சுமார் 02.30 மணியளவில் திரு.கதிரவன் எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை SP Office

பக்கம் உள்ள P.R மெடிக்கல்ஸ் என்ற Whole Sale Agency எதிரில் தான் நிற்பதாகவும் அங்கு வந்து அவரை பார்க்கும்படியும் கூறினார். நான் அவர் அழைத்ததன் பேரில் சுமார் 10 நிமிடம் கழித்து சுமார் 02.40 மணிக்கு அவரிடம் சென்று எனது Drug Sale License பற்றி கேட்டேன். அப்போது அவர் எனது application மற்றும் அத்துடன் உள்ள ஆவணங்களை பார்த்தேன் என்றும், ஆனால் எனக்கு Drug Sale License கிடைப்பதற்கு பரிந்துரை செய்ய வேண்டுமானால் தனக்கு ரூபாய் 10,000/- தனியாக கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். அதற்கு நான் எனது application-ல் எதாவது குறைபாடு உள்ளதா என்று கேட்டதற்கு அவர் அதெல்லாம் இல்லை நான் பரிந்துரை செய்ய வேண்டுமானால் வழக்கமாக ரூ.15000-ம் வாங்குவேன். உங்களிடம் ஏற்கனவே ஒரு மெடிக்கல் ஸ்டோர் உள்ளதால் ரூ.10000-ம் கட்டாயம் கொடுங்கள் அதை நாளை 12.09.2025-ம்தேதி காலையில் என்னிடம் பேசிவிட்டு நான் சொல்லும் இடத்தில் கொண்டு வாருங்கள் என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை இருந்தாலும் அப்போது அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து Drug Sale License வாங்க விருப்பம் இல்லாததால் அவர் லஞ்சமாக கேட்ட ரூ.10,000/-த்தை எனது செலவுக்கு வைத்திருந்த தொகையிலிருந்து எடுத்துக் கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் ரூ.10,000/- லஞ்சமாக கேட்ட கன்னியாகுமரி மாவட்ட Drugs Inspector திரு.கதிரவன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க நான் Drug sale license-க்கா விண்ணப்பித்த Payment reciept-ஐயும் புகார் மனுவோடு இணைத்து அளிக்கிறேன். இப்படிக்கு sd xxx 12.09.2025 Sir, Received the complaint on 12.09.2025 at 09.00 hrs., genuineness of the complainant was verified through sources and found to be genuine. Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie in the allegation of the complainant. Since registration of Regular Case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and accordingly registered a case in Kanyakumari Detachment of the V&AC Cr.No.08/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 12.09.2025 at 10.00 hrs and proceed further. Sd.xxx 12/09/2025 (C.SIVASANKARI) Inspector of Police, V&AC, Nagercoil.

இந்த அசல் முதல் தகவலறிக்கையை வாதியின் புகார் மனு மற்றும் வாதி புகாரோடு இணைத்து வழங்கிய Payment Receipt ஆகியவற்றை இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் தொடர் நடிவடிக்கைக்கும் எடுத்து கொண்டேன்

12/9/2025

Inspector of Police,
V&AC, Kanyakumari
Detachment @ Nagercoil